# ‘லங்காசிறி’ கப்பல் பருத்தித்துறைக்கு வந்ததையடுத்து விசேட உணவு நிவாரணம் தடையின்றி வழங்க ஏற்பாடு

கடல் கொந்தளிப்புக்காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து பொருட்களை இறக்கமுடியாத நிலையில் கடந்த 16 ஆம் திகதி திருகோணமலைக்குத் திரும்பிச்சென்ற ‘லங்காசிறி’ என்ற உணவுக்கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்தது. நேற்று முழுவதும் கப்பலிருந்து பொருட்களை இறக்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இக்கப்பலில் கொண்டுவரப்பட்ட 2700 மெற்றிக்தொன் உணவுப்பொருட்களும் துரிதமாக இறக்கப்பட்டு, சகல பல நோ. கூட்டுறவுச்சங்கங்களுக்கும் அனுப்பி வைக்க யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை தற்போது நடைமுறையில் உள்ள 2 ஆம் வாரத்திற்கான விசேட இலவச உணவு விநியோகத்தை எதுவித தடையுமின்றி மேற்கொள்ள இக்கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருட்கள் உணவுப்பற்றாக்குறையுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்படவுள்ளது. நான்கு வாரங்களுக்கான உணவுப்பொருட்களை அகதி முகாம்களுக்கு வழங்குவதற்கு இக்கப்பலில் வந்த பொருட்களில் ஒரு பகுதியை களஞ்சியப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ‘லங்காசிறி’ கப்பல் வந்த செய்தியை அடுத்து தனியார் கடைகளில் பல பொருட்களின் விலை கணிசமான அளவு நேற்றுநண்பகலிலிருந்து குறைந்தது.

இன்னும் சில தினங்களில் மற்றொரு உணவுக்கப்பலும் வடக்கே வர ஆயத்தமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ('66)


பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 27 பிரமோதூத மார்கழி 09 (24-12-1990) திங்கள்


## பசியால் அரிசியை உண்ட சிறுவனுக்கு தந்தை கொடுத்த கொடூரத் தண்டனை!

பசிக்கொடுமை காரணமாக வீட்டில் இருந்த அரிசியை உண்ட மகனை (8வயதுச் சிறுவன்) மின்சாரவயரினால் மிகமோசமாகத்தாக்கினார் தந்தை.

சுழிபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தால் சுமார் எழுபது அடிகாயத்தழும்புகளுடன் நா.விஜயகுமார் என்ற சிறுவன் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சிறுவனை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்த பெற்றோர், நேற்று மாலை வரை ஆஸ்பத்திரிக்கு மகனைப் பார்வையிட வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சிறுவன் அடிகாயங்களின் வேதனை தாங்க முடியாது அழுது கொண்டிருப்பதைப் பார்க்க பரிதாபமாக இருக்கின்றது. (ப11)

ஸ்ரீலங்கா அரசும் - விடுதலைப் புலிகளும்

# யுத்த நிறுத்தம் செய்து பேச்சு நடத்த கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை

## கொழும்பில் விடுத்த நத்தார் செய்தி

வடக்கு கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வரும் யுத்தத்தைநிறுத்தி ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் ஓர் சமரஸ உடன்பாட்டுக்கு வருமாறும், யுத்தநிறுத்தத்துடன் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

நாளைய நத்தார் தினத்தை முன்னிட்டு கத்தோலிக்க ஆயர்பேரவை நேற்றுகொழும்பில் விடுத்த நத்தார் செய்தியில் மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலை நம்பிக்கையற்றதாகவே காணப்படுகிறது. வன்முறையற்ற நடவடிக்கைகள் மூலம் சமாதானமாக இனப்பிரச்சினைக்கு சரியானதொரு தீர்வு காணமுடியும் என ஆயர் பேரவையினர் கருதுவதாகவும் மேற்படி நத்தார் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பு வந்திருந்த உலகத்திருச்சபை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஐ. தே. க. வருடாந்த மாநாட்டில் 4 தமிழ்க் குழுக்களும் பங்கேற்றன!

நேற்று வெள்ளவத்தையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 36 வது வருடாந்த மாநாட்டில் கொழும்பில் சமுகம் தந்திருந்தன. இவற்றில் நான்கு தமிழ்க்குழுக்களின் அரசியற் கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் நகரை நோக்கி

மணலாறு மாவட்டத்தில்

## இராணுவஜீப் மீது தாக்குதல் மற்றுமோர் அதிகாரி பலி!

மணலாறு மாவட்டத்தில் முந்திரிகைக்குளம் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த ஜீப் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவ அதிகாரி ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 8. 30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் ஜீப் முற்றாக சேதமடைந்தது. ஜீப் வண்டியை ஓட்டிச் சென்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஸ்தலத்திலேயே பலியானார்.

இவரிடமிருந்து பிறவுனிங் பிஸ்டல்- 1, பிஸ்டல் மகசின் - 2, 9 எம். எம். ரவை- 28, என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

கடந்த செவ்வாயன்று நடந்த மோதலில் ஸ்ரீலங்கா அரசின் திருமலை இராணுவத் தளபதியும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் பலியானது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் இளைஞர்களிடம் கொழும்பில் மோசடி

சியின் 36 வது வருடாந்த மாநாட்டில் கொழும்பில் உள்ள தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

மாநாட்டிற்காக அழைக்கப்பட்ட 24 எதிர்க்கட்சிகளில் பத்துக் கட்சிகள் மட்டுமே களின் அரசியற் கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ பி டி. பி, புளொட், டெலோ, ஈ. என். டி. எல். எப். ஆகிய தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளே மாநாட்டில் கலந்து கொண்டவர்களாவர்.

## கப்பம் கேட்ட தமிழ் இளைஞர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

கொழும்பு வர்த்தகர்களிடம் கப்பம் கேட்கும் சில தமிழ் இளைஞர்களை பொலிஸார் தேடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொட்டாஞ்சேனையில் உள்ள நகைக் கடை ஒன்றில் இரு தமிழ் இளைஞர்கள் பணம் பறிக்க முயன்ற போது, கடை உரிமையாளர் அவ்விளைஞர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் வெள்ளம் 2லட்சம் பேர்வரை அகதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் 49 ஆயிரத்து 579 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 13 ஆயிரம் பேர் தமது வீடுவாசல்களை இழந்துள்ளனர்.

50 க்கும் மேற்பட்ட கால் நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளதாகவும் இதனால் வீதிகளில் பெரும் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 20 ஆயிரம் கெக்டேயர் விவசாய நெற்

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகரை நோக்கி இரவு நேரம் ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் அதிகாலை 2 மணி வரை பலாலியிலிருந்து யாழ் நகரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இவை சென் பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்புத்துறை, கச்சேரிப் பகுதி, அரியாலை, குருநகர் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

சென் பற்றிக்ஸ் கல்லூரி விறாந்தையில் நித்திரையாக இருந்த டி எம் டொனால்ட் என்பவரின் காலில் படுகாயம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### மாதகல் கடலில் வைத்து

## வள்ளத்தை கடற்படைப் படகு கட்டி இழுத்துச் சென்றது

கடந்த வெள்ளிக்கிழமை மாதகல் கடற்பகுதியில் இயந்திரப்படகு ஒன்றை கடற்படைப் படகு கட்டி இழுத்துச் சென்றதை கரையில் நின்ற பொது மக்கள் பலரும் அவதானித்தனர்.

இப்படகு தமிழ் நாட்டிலிருந்து திரும்பிக்கொண்டிருக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அரசாங்க அதிபர் நேற்று பருத்தித்துறைக்கு விஜயம்

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சென்று கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள உணவுப் பொருட்களை இறக்கும் வேலைகளைப் பார்வையிட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் மோசடி

வெளிநாடு செல்வதற்கென கொழும்பு சென்ற ஒருவரிடம் இருந்து 75,000 ரூபாவும், கடவுச் சீட்டும் அபகரிக்கப்பட்டது.

வெளிநாட்டு ஏஜென்சியிடம் பணத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்த கொக்குவிலைச் சேர்ந்த ரவிதரன் என்பவரை இரு சிங்களவர்கள் வந்து கூட்டிச் சென்றதாகவும் பின்னர் அவரிடமிருந்தஇவற்றைப் பறித்து சென்றுவிட்டதாகவும் தெரிய வருகிறது.

கொள்ளுப்பிட்டியில் வைத்து கைதடியைச் சேர்ந்த சிவா என்பரிடமும் தங்க மோதிரம் ஒன்றும் பறித்துச் செல்லப்பட்டது. (71

## மாணவர் எழுச்சி ஊர்வலம் யாழ் நகரில் நடைபெற்றது

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர் எழுச்சி ஊர்வலம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

1987 ம் ஆண்டு டிசம்பர் 23-ல் இந்திய இராணுவத்தினருடனான நேரடி மோத

—04 ஆம் பக்கம் பார்க்க


உள்ளே . . .

'சித்தமழகியான்' தரும் திருவாதிரைத் தத்துவ முத்துக்கள்

'போற்றி அருளுக'

சிறப்பம் சங்கள்

கிறிஸ்துவின் தரிசனம் பெறலாம்

'கிறிஸ்து பிறப்பு—சிந்தனை'

'சுவாமி ஜீவாபோல் தருகிறார்.


தொடர்ந்து தவறாது படியுங்கள்

# அரசு உணவுக் களஞ்சியத்தில்

# ரூ. 400 கோடி பொருள் மோசடி!

அரிசி, மா, உணவுப் பொருட்கள் மூலமாக அரசுக்குச் சொந்தமான களஞ் சியங்களில் 400 கோடி ரூபா மோசடி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

இப்பெரும் மோசடி தொடர்பாக விசாரணைகள் தீவிரமாக முடுக்கி விடப்பட் டுள்ளன.

நேற்று முன் தினம் வரை எண்பது பேர் இரகசிய விசா ரணைகள் மூலம் இது தொடர் பாக கைதாகியுள்ளனர்.

மேலும் ஐம்பது பேர் சில தினங்களுக்குள் இது தொடர் பாக கைதாவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போற்றி அருளுக - 2

## மெட்டி ஒலித்தது-மெல்ல நடந்தாள்

அவள் வைகறை வேளையிலே கண் விழித்து எழுந் தாள். இருள் இப்பொழுதுதான் கட்டுக் குலையத் தொடங்குகிறது. தாமரை பூத்த தண்ணீரிலே தோய்ந்து தலை முழுக வேண்டும்: தலைவன் தாள் தலைப்பட வேண்டும்; தாமதம் கூடாது; இந்த எண்ணம் அவளை உந்தித் தள்ளுகிறது மெல்ல எழுந்து நடக்கி றாள். அயல் வீட்டை அடைந்து விட்டாள். அது அவளு டையதோழி வாழும் வீடு. அந்தவீட்டின் கதவிலே தட்டுகிறாள். குரல் கொடுக்கிறாள்.

''வாட்கண்ணி! வாட்கண்ணி!! எழும்படியம்மா, நேரமாகி விட்டது ... வாட்கண்ணீ!''

வாட்கண்ணியின் உறக்கம் இன்னும் முற்றாகத் தெளியவில்லை. அவள் தூக்கக் கலக்கத்திலே முனகு கிறாள், 'யாரது? நடுச்சாமத்திலே வந்து நித்திரை யைக் குழப்பிக்கொண்டு..?'

''என்னப்பா? உனக்குக் காது செவிடா?''

''சிக்! என்ன தொல்லை...''

''நித்திரைக் கலக்கம் இன்னும் முறியவில்லைப் போலும். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதிமேற் பாடிய பாட்டுமா உன்னை அசைக்க வில்லை? சே! வெட்கம், வெட்கம்! அடுத்த வீட்டில் இருக்கிறாளே, முத்துநகை...''

''ம் ... ம்... சொல்லு, சொல்லு. என்ன புளுகப் போகிறாய் அவளைப்பற்றி?'

''நேற்றும் வழக்கம்போலப் பாடிக்கொண்டு போனோம். பாட்டொலி கேட்டதுதான் தாமதம், அகங் குழைந்து மெய்யரும்பி விசிக்கத் தொடங்கி விட்டாள். மஞ்சத்திலிருந்து புரண்டு விழுந்து விட் டாளடி!''

''அப்படியா? அப்புறம்?''

''இரண்டொரு விநாடி மூச்சே இல்லை. நீயும்தான் இருக்கிறாயே, தூங்கு மூஞ்சி ''

'மன்னித்துக்கொள் மனோன்மணி, சுயநினைவில் லாத நேரத்திலே ஏதாவது தவறுதலாக ..'

''சீ, சீ! அப்படி ஒன்றும் நீ பேசவில்லை. பனிக் குளிருக்குப் போர்வை இதமாகத்தான் இருக்கும்''.

''என்றாலும் எடுத்து எறிந்திருக்க வேண்டும். மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலியை வீதியிலே கேட்டபொழுது நான் போர்வையை இழுத்து வீசி இருக்க வேண்டும்''.

### கூதல் நேரத்திலே

வாட்கண்ணியும் மனோன்மணியும் நேரிழை வீட் டுக்கு வந்து விட்டனர். கதவிலே தட்டுகின்றனர்— நேரிழையை எழுப்பும் பொருட்டு!

''அம்மா நேரிழை நேரிழை. நேரிழை!!''

''ஊகூம் பேச்சும் இல்லை - மூச்சுமில்லை இரு. நான் கூப்பிட்டுப் பார்க்கிறேன் காதலி! காதலீ!!''

நேரிழை இப்போதுதான் சோம்பல் முறிக்கிறாள் ''என்னப்பா கூதல் நேரத்திலே காதல் காதல் என்று

### ஆசிரியர்கள் அன்பளிப்பு

தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்காக பருத்தித்துறை சித்திவிநாய கர் வித்தியாலய ஆசிரியர் கள் தமது இரண்டு நாட் களுக்குரிய சம்பளப் பணத்தை வழங்கியுள்ளனர்.

## ஜா புதுடில்லி விரைவு

அவசர ஆலோசனைகளின் பொருட்டு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. என். ஆர். ஜா நேற்று முன்தின மிரவு புதுடில்லி புறப் பட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனப் பிரதமர் திரு. லீ பெங்கின் கொழும்பு விஜ யத்தின் பின் அவர் அவசர மாகப் புதுடில்லிக்கு அழைக் கப்பட்டிருப்பது முக்கியத்து வத்துடன் நோக்கப்படுகிறது.


### சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சுத்தமான வேப்பெண் ணெய் மருத்துவ தேவைக் கும் பயிரைத் தாக்கும் பீடைகள் ஒழிக்கவும்சிறந் தது. போத்தல்ரூபா80/- திருநெல்வேலி. ஓணுவில் யாழ்நகர் நவீனசந்தை அண்ணா கோப்பீ கடை களிலும்கிடைக்கும். மில்க் வைற், யாழ்ப்பாணம். 12157

**விற்பனைக்கு**

அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் சீர்திருத்த எழுத் துக்களுடன் விற்பனை யாகின்றது. விலை ரூபா 12/- துர்க்கா, தன லட்சுமி சுன்னாகம், சந் துரு புத்தகசாலை பருத் தித்துறை, திருமகள், லட் சுமி நெல்லியடி. 12142

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்ல றையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரி களுக்கு விசேட கழி வுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத் தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப் பாணம். 12155



போட்டோஸ்ரற் பிரதிகள்

• சாதாரணம்
• சிறிதாக்கல்
• பெரிதாக்கல்

தரமான தாள்களில் தெளிவான பிரதிகளைப் பெற விஜயம் செய்யுங்கள்




ஸ்கைலைன்ஸ் 281-B, மணிக்கூட்டுக் கோபுரவீதி, யாழ்ப்பாணம்



# புதிய உயர் கல்லூரி



யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் விலங்கு வேளாண்மைத் துறைக்கு பண்ணை அமைப்பதற்குகந்த கால்நடைகளை வழங்குவதற்கான

## கேள்விப்பத்திரங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளை வழங் குவதற்கான கேள்விப் பத்திரங்கள் பண்ணையாளர் களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் கீழ் உள்ள மாதிரிப் படிவத் தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விபரங்களு டன் 08-01-1991 திகதி காலை 10 மணிக்கு முன்னர் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கால்நடைகள் வழங்குவதற்கான கேள் விப் பத்திரங்கள்'' என்று குறிப்பிட்டு அனுப்பப்படு தல் வேண்டும்.

1. ஜேர்சி கலப்பின கறவைப் பசுக்களை வழங்குதல்

ஜேர்சி கலப்பின பசு/நாகுகள் $2\frac{1}{2}$ - 04 வயதுக்குட் பட்டதாகவும், 08 - 10 லீற்றர் பாலுற்பத்தியுடையன வாகவும், முதலாவது அல்லது இரண்டாவது கன்று ஈன்றதாகவும், 02 - 04 மாத கன்றுடன் அல்லது பிந் திய சினைப்பருவத்தில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி பசுக்களை வழங்க விரும்புபவர்கள் வழங்க விருக்கும் பசுக்களின் எண்ணிக்கை, கோரும் விலை, விபரம். ஒவ்வொரு விலங்கினதும் இனம், வயது, கறவை/சினைப் பருவம், பாலுற்பத்தி (லீற்றர்) கன்று, ஈன்ற பசுவாயின் வயது ஆண்/பெண் இன விபரம் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. ஜேர்சி, தர்பகார், சிந்தி இன காளை மாடுகள்வழங்குதல்

ஜேர்சி, தர்பகார், சிந்தி இன இனவிருத்திக்காக சேவைக்குட்படுத்தக் கூடிய 02 - 03 வயதுடைய செயற்கை முறை சினைப்படுத்தல் மூலம் பிறந்த காளை மாடுகள் தேவைப்படுகின்றன. இவற்றை வழங்க விரும்புபவர்கள் ஒவ்வொரு விலங்கினதும் இனம், வயது, தாய்ப் பசுவின் பாலுற்பத்தி. விலை விபரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. தூயஜமுனா பாறி, சாணான் மறி ஆடுகளை வழங்குதல்:

யாழ் குடாநாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாறி தூய இன சாணான் 08 மாதம் - 18 மாத வயதுக்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க இருக்கும் ஆடுகளின் எண் ணிக்கை, இனம், வயது, கோரும் விலை விபரம் ஆகி யவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

4. தூய இன ஜமுனாபாறி, சாணான் கடாய் ஆடுகளை வழங்குதல்:

யாழ் குடா நாட்டுப் பகுதியிலிருந்து $1\frac{1}{2}$ — $2\frac{1}{2}$ வய துக்கிடைப்பட்ட தூய இன ஜமுனாபாறி, சாணான் இன விருத்திக்குகந்த கடாய் ஆடுகளை வழங்க விரும் புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, எண்ணிக்கை, விலை விபரம் ஆகியவற்றை குறிப் பிட்டு விண்ணப்பிக்கவும்.

5. நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்

"என்னப்பா கூதல் நேரத்திலே காதல் காதல் என்று கத்துகிறீர்கள்? காது கிழிகிறது. இதென்ன கூத்தடிப்பு?"

"எங்களுக்கென்ன தெரியும்? நீ தானே இரவு பகல் பாராமல் காதல், பாசம், நேசம் என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருப்பாய்!"

"ஆமாம், பாசம் பரஞ்சோதிக்கு என்பாய். 'அவருடைய காதலி நான்' என்று பெருமையோடு பேசிக் கொள்வாயே!"

"அந்தப் பாசம் எல்லாம் எங்கே போய் விட்டது இப்போது?"

"நேற்றுத் தொடக்கம் ஒரு புதுக்காதல் — நேரிழைக்கு"

என்ன, என்ன? ஆர் ஆள்?"

"படுக்கை."

எல்லாரும் சிரிக்கிறார்கள்.

"படுக்கை மீதா இவள் காதல் கொண்டு விட்டாள்?"

"பின்னை என்ன? மல்லிகைப் பூ பரப்பிய மஞ்சம் அல்லவா? வாசனைக்கு குறைவு ஏது? அப்படிப்பட்ட படுக்கையை விட்டுப் பிரியலாமா? அவ்வாறு பிரிவது முறையா? தகுமா? தருமம் தானா?"

"சீச்சீ! வம்புப் பேச்சுக்கு இதுவா நேரம்?"

"உறக்கம் தெளிந்து விட்டது. கருத்துள்ள பேச்சுகள் அவள் வாயிலிருந்து இனித்தான் புறப்படும். என்ன, அப்படித்தானே, நேரிழை"

"சரி வாருங்கள்"

மூவரும் புறப்பட்டுப் போகிறார்கள்.

- 'சித்தமழகியான்'

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## (வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

★ A/L ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பயிலுநர் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழக பதிவினை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

## விண்ணப்ப முடிவு திகதி
## 02 - 01 - 1991

### விரிவுரை ஆரம்பம்: 05-01-1991

எமது கல்லூரியினூடாக B.A. பரீட்சையில் 90வீத மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

எஸ். அருள்நங்கை,
நிர்வாகி.

12142

5. நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்

இன விருத்திக்காக நாட்டு இன வகை $01-1\frac{1}{2}$ வயதுடைய மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றன. கிளிநொச்சி பிரதேசத்தில் இருந்து $01-1\frac{1}{2}$ வயதுடைய நாட்டு இன மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், வயது, கோரும் விலை விபரம் ஆகியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

## மாதிரி கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்:—
2. முகவரி:—
3. கால்நடைகள் இருக்கும் இடம்
   - i. கிராமம்.
   - ii. உதவி அரச அதிபர் பிரிவு.
   - iii.. மாவட்டம்.
4. வழங்க விரும்பும் கால்நடைகளின் விபரமும் கோரும் விலையும்.

| (1) | 2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| கால்நடை வகை | இனம் | வயது | எண்ணிக்கை | பாலின் அளவு (லீற்றரில்) | கோரும் விலை |

5. மேற்குறிப்பிட்ட கால்நடைகளை கையளிக்கக் கூடிய இடம் (முகவரி).

...... .................................. .....
விண்ணப்பதாரியின் கையொப்பம்

12151

கிறிஸ்து பிறப்பு - சிந்தனை 2

## தேடும் தெய்வம்

குடிக்-கணக்கு- எடுப்பு என்பதால் சூசை தம் சொந்த ஊரான பெத்தலகேம் சென்றார். அவர் மனைவி மரியாள் பேறுகால வேதனைப்படும் வேளை அவர்களுக்கு இடமளிக்க அவர்கள் சொந்த மண்ணின் மைந்தருக்கு மனம் இல்லாமற் போய்விட்டது. இது மானிடவர்க்கத்திற்கே சொந்தமான ஒரு பண்பாயிற்று. இல்லங்களை மட்டுமல்ல உள்ளங்களையும் பூட்டிவிட்டவர்கள் இறைமகன் இயேசுவை எப்படி வரவேற்கமுடியும்? எமது சொந்த மண்ணிலும் இன்று அகதிகளானோர் பலர். நொந்தவர்கள் குரல் கேளாதோர் சூசையின் தட்டும் குரல் கேளாதவரை ஒத்தவரே. ''நான்'', ''எனது' , ''எனக்கு'' என்ற குறுகிய வட்டத்தில் சுயநலவாதிகளாக வாழ்வோர் தனிமை என்ற கொடிய நோயால் மடிகிறார்கள். வீடு, பணம், சொத்தைத்தேடி அலைந்தவர்கள் மனித நட்பை இழந்து வரண்ட இதயங்களாகிவிட்டனர். இவர்கள் மீட்பர் இயேசுவை மனித வடிவில் காணத் தவறிவிடுகின்றனர். பாவிக்கு மன்னிப்பும், நோயாளருக்குக் குணவாழ்வும், பசித்தோருக்கு உணவும், தவித்தோருக்கு நட்பும் வழங்கிய இயேசு தம் வாழ்வையே பணியாக்கினார். அன்புத்தெய்வம் கொடுப்பதில் நிறைவு கண்டது. ஜீவன்கள் வாழ்வது அவரது இலட்சியமானது.

எம் மண்ணில் அன்பர் உயிரிழந்து, சொத்திழந்து, நம்பிக்கை இழந்து திசைதெரியாது தவிப்பவர் ஏராளம். இவர்களில் தெய்வதரிசனம் காணவிழைவதுபுனிதமான ஒரு பயணமாகும். வாழ்க்கைப் பிரச்சினைகள்-என்ற கருப்ப வேதனையோடு எம் ஆதரவை நாடும் அயலவர்க்கு நல்ல சமாரித்தராக எம்மால் இயன்ற பணியை ஆற்றுவதுதான் கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டமாகும்.

— சுவாமி ஜீவா போல்

## முகாமைத்துவ பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தரம் இரண்டு பாடசாலை அதிபர்களுக்கும், தரம் ஒன்று ஏ. பி , ஒன்று சி பாடசாலை உப-அதிபர்களுக்குமான கல்வி முகாமைத்துவ சேவைக்காலப் பயிற்சி 26, 27, 28ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திலும், பளை, பூநகரி, முளங்காவில் கொத்தணிகளைச் சேர்ந்த தரம் மூன்று பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவ பயிற்சி வகுப்புக்கள் 27, 28, 29ஆம் திகதிகளில் பூநகரி மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரும் கல்வி முகாமைத்துவ நிலையத் தலைவருமான கே. கந்தசாமி அறிவித்துள்ளார்.

வகுப்புக்கள் காலை 9 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறும். மதிய போசன ஒழுங்குகளை அதிபர்கள் தாமே மேற்கொள்ளவேண்டுமெனவும் வழமையான சேவைக்கால கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் தகவல்:

# 6 வாரங்களுக்கொருதடவை 5 ஆயிரம் பேருக்குப் பயிற்சி!

வட, கிழக்கில் ஆயுதப்படை நடவடிக்கைகளின் பொருட்டு ஆறு வாரங்களுக்கு ஒரு தடவை ஐயாயிரம் பேர் பயிற்றப்படுவர் எனப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பாதுகாப்பு நிலைமை பற்றி விவரிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்

கிழக்கில் திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சிவில் நிர்வாகம் நடைபெறுகிறது என்று அமைச்சர் தென்னிலங்கை நிகழ்ச்சிகளில் உரையாற்றுகையில் கூறி வருகின்ற போதிலும் இவ்விதம் அவர் கூடுதல் படைதிரட்டலுக்கு முற்பட்டுள்ளது கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் பலம் மேலோங்கியுள்ளதனையே எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று கூறப்படுகின்றது

## மதகுவைத்தகுளம் கிராமத்தில் பல வீடுகள் தரைமட்டம்

வவுனியா எல்லைப்புற கிராமங்களில் ஒன்றான மதகு வைத்த குளத்தில் பல வீடுகள் உடைத்துத் தரை மட்டமாக்கப் பட்டுள்ளன.

தமிழர்களுக்குச் சொந்தமான இவ் வீடுகள் இராணுவ சென்றிகளுக்காக இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன. (50)

## ஒரே தடவையில் ஐந்து குட்டிகள்

சுழிபுரத்தில் ஆடு ஒன்று ஒரே தடவையில் ஐந்து குட்டிகளை ஈன்றுள்ளது.

இக்குட்டிகள் ஐந்தும் உயிருடன் உள்ளன. (48)

வட,கிழக்கு இணைப்பை எதிர்த்து

## முஸ்லிம்கள் புதிய அமைப்பு உருவாக்கத் தீர்மானம்

வட, கிழக்கு இணைப்பை முஸ்லிங்கள் மும்முரமாக எதிர்க்க ஆரம்பித்துள்ளனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இரு மாகாணங்களையும் நிரந்தரமாக இணைக்கக் கூடாது என்பதற்கான தங்கள் பிரசாரங்களை வலுப்படுத்த வேண்டுமென்பதற்காக 'கிழக்குமாகாண ஐக்கிய முன்னணி, என்ற அமைப்பைத் தொடங்குவதெனவும் முஸ்லிம்கள் தீர்மானித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெருப்புக் காய்ச்சல் குடாநாட்டில் பரவுகிறது!

யாழ் மாவட்டத்தில் தற்போது நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் தொகை தினமும் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தகுந்த சுகாதாரப் பழக்க வழக்கம் இன்மையால் இந்நோய் பரவுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுத்தமான, கொதித்து ஆறிய நீர் பருகுதல், மலசல கூடங்களைச் சுத்தமாகப் பாவித்தல், உடலைச் சுத்தமாகப் பேணுதல் போன்றன கவனிக்கப்பட்டால் இந்நோயிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

தெற்கில் நெருப்புக்காய்ச்சலினால் இதுவரை 20க்கும் அதிகமானோர், பலியானது இங்கு குறிப்பிடத்தக்கது.(74)

## போதைவஸ்து கடத்தல் தமிழ் இளைஞர்கள் கைது

1. 7 கிலோ கிராம் எடையுள்ள ஹிரோயினை போட்டோ அல்பத்தினுள் வைத்துக் கடத்திய தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கப்பகுதியினரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

30 லட்சம் ரூபா பெறுமதியான இந்த போதைவஸ்தைக் சென்னையில் இருந்து கடத்தி வந்த நல்லூரைச் சேர்ந்த ரவீந்திரன் என்ற இளைஞரே இவ்வாறு பிடிபட்ட வராவர்.

இதேசமயம் சுமார் பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டரைக் கிலோ எடையுள்ள ஹிரோயினைக் களவாக இலங்கைக்குக் கடத்தி வர முயன்ற செல்வநாயகம் என்பவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டார்.

சென்னையிலிருந்து விமானம் மூலம் கொழும்பு வந்த போது இவரது சாப்பாட்டுப் பெட்டிக்குள் மறைத்து வைத்துக் கடத்தி வர முயன்ற சமயம் அதிகாரிகளிடம் சிக்கினார். (11

## நாட்டில் எட்டு லட்சம் பேரிடம் அடையாள அட்டை இல்லை

சேதமடைந்த மற்றும் அடையாளம் காணமுடியாத தேசிய அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையான அட்டைகள் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்கள் தொகை சுமார் எட்டு லட்சத்துக்கு மேல் எனத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இவர்களில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் இதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் 90 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். (38)

## மறுமலர்ச்சிக் கழக புதிய நிர்வாகிகள்

நிகழும் கல்வியாண்டிற்கான யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தெரிவான புதிய நிர்வாகிகளின் விபரம் வருமாறு:

தலைவர்:- க. சத்தியநாதன் (கலைப்பீடம்), உப-தலைவர்:- செல்வி லே சுமித்திரா (விஞ்ஞானபீடம்), செயலாளர்:- செல்வி க. சந்திரகுமாரி (கலைப்பீடம்), உப-செயலாளர்:- செ. முகுந்தன் (விஞ்ஞானபீடம்), பொருளாளர்:- செல்வி லோ சுமதி (கலைப்பீடம்), இணைப்பதிப்பாசிரியர்;- த. தவராசா (விஞ்ஞானபீடம்), செல்வி சு. ?ேமினி (கலைப்பீடம்)

நிர்வாகசபை உறுப்பினர்களாக ஐவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சமூகத்தின் முன்னோடிப் பொது அமைப்பிலிருந்து வே. அருண் நியமன உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டார்.

## யாழ் மாநகர சபைக்கு 8 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கீடு

யாழ் மாநகர சபையினால் 1991-ம் ஆண்டின் அபிவிருத்தி வேலைக்கு 8 லட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபையால் தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் எதிர் நோக்கியிருப்பதாகவும் ஆயினும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நகரசுத்திகரிப்பு வேலைக்கு மாதாந்தம் 30 000 ரூபா றைக்ரர் வாடகைக்கு செலுத்தப்படுவதாகவும் மேலும்

புதிய நிபந்தனையால்

## கடும் பாதிப்புற்றோர் நிவாரணம் பெறுவதில் சிரமம்

## முல்லையில் 10 பேர் ஓய்வுபெற விருப்பம்

முல்லைத்தீவு பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் 10 பேரும், முல்லைத்தீவு கல்வித் திணைக்கள ஊழியர்கள் 3 பேரும் சுயவிருப்பின் பேரில் இளைப்பாறுவதற்கான விண்ணப்பங்களை கையளித்துள்ளனர், (ப-17)

யால் தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டதில் அபிவிருத்தி வேலைகளுக்கு 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வருடம் இராணுவ நடவடிக்கைகளால்யாழ் மாநகர சபைக்கு பெருமளவு வருமான இழப்பு ஏற்பட்டதால் அடுத்த வருட அபிவிருத்தி வேலைகளுக்கு 8லட்சம் ரூபா ஒதுக்க வேண்டியுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆறு மாதமாக எவ்வித வருமானமும் இல்லாததால் யாழ் மாநகரசபை பெரும் நிதி நெருக்கடியை

றைக்ரர் வாடகைக்கு செலுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

---

## பட்டப்பின்படிப்பு நேர்முகப்பரீட்சை

யாழ் பல்கலைக்கழகத்தில் 1990 91-ம் ஆண்டுக்கு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்துப் போட்டிப் பரீட்சையில் சித்தி எய்திய ஆசிரியர்க்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி மாதம்18-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என யாழ்மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (74)

# கப்பல்கள் மூலமாகவே கிளிநொச்சிக்கு உணவுப்பொருள்

கிளிநொச்சிக்கான உணவுப் பொருள் கொழும்பில் இருந்து கப்பல்மூலம்கொண்டு வர கிளிநொச்சி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக வலைப்பாடு இறங்கு துறைப்பகுதி திருத்தப்படவுள்ளது.

வலைப்பாடு இறங்கு துறையை பார்வையிட்ட அரசாங்க அதிபர் 5 லட்சம் ரூபா செலவில் அது புனரமைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (35)

## நிவாரணம் பெறுவதில் சிரமம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டும், இறந்தவர்களினதும் குடும்பத்தவர்கள் கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணம் பெறுவதில் புதிய 'தடை' ஒன்றையும் எதிர்நோக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

யாழ் மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள் வேறுமாவட்டங்களில் வன்செயலின் போது இறந்திருந்தால் அவர் இறந்த மாவட்ட அரச அதிபர் இறந்தவரின் குடும்பத்தினர் அம் மாவட்டத்தில் நிவாரணம் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்

இறந்தவரின் மரணச் சான்றிதழை அம் மாவட்டத்திலுள்ள பிறப்பு இறப்பு பதிவாளர் அத்தாடசிப்படுத்த வேண்டும். இரு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டாலே நிவாரணத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் பலியானவர்களின் குடும்பத்தவர்கள் மேற்படி செயலகங்கள் இயங்காத, போக்குவரத்து, தபால்தொடர்புகள் இல்லாத நிலையில் இந்த புதிய நிபந்தனையை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (36)

---

## நல்லை ஆதீனத்தில் திருவெம்பாவை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருவெம்பாவை நிகழ்ச்சிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

தினமும் காலையில் 4 00 மணிக்கு விசேட பூஜை இடம்பெறும் 4 30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியும் 5 மணிக்கு திருவெம்பாவை ஓதலும் (நல்லை சிவன் கோவிலில்), 7 00 மணிக்கு பூஜை திருவிழாவும் இடம்பெறும்.

மாலை 3-00 மணிக்கு திருவாதவூரடிகள் புராண படனமும், மாலை 5 30 மணிக்கு திருவெம்பாவை ஓதலும் (நல்லை சிவன் கோவிலில்) இடம்பெறும்.

30 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறும்.


''இடிபட்ட சுவர்போலக் கலி விழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ!''

**என ரஷ்யப் புரட்சியை வாழ்த்தி வரவேற்றான் பாரதி!**

புரட்சி வெடித்து முக்கால் நூற்றாண்டாகிறது.
புதுயுகம் பூத்ததா?

அல்லது

பாதையில் ஏற்பட்ட இடறல்களைச் சுட்டி,
பயணத்தின் இலட்சியமான
சமதர்மப் பூங்காவே சாத்தியமற்றது
என்று செய்யப்படும்
எதிர்ப்பிரசாரத்தில் பொருளுண்டா?
என அலசி ஆராயும் கட்டுரைத்தொடர்

## 'எழ மறுக்கும் கிருதயுகம்'

எமது அரசியல் விமர்சகர்

**க. மா. இராசையா**

எழுதுவது.

**26.12.90 முரசொலியில் ஆரம்பமாகிறது!**

EURASOLIE REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA 24-12-1990 திங்கட்கிழமை

பொது நிர்வாக அமைச்சரின் புத்தாண்டுப்பரிசு

# அரச ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு முதல் வைத்தியப் பரிசோதனையில் முன்னுரிமை

அரசாங்க ஊழியர்களுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் அரசினர் வைத்தியசாலைகளில் விசேட முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டு, மகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் புத்தாண்டில் அறிமுகமாகவுள்ள இத் திட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் ஆண்டுக்கு ஒரு தடவை இலவச மருத்துவப் பரிசோதனை பெற வசதி செய்யப்படும். இதன்படி ஒரு விசேட 'பெர்மிட்' இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பொது நிர்வாக அமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து நடைமுறைக்குக் கொண்டுவரும் இத் திட்டத்தால் 25 லட்சம் அரசாங்க ஊழியர்கள் நன்மையடைவர்.

நிபுணர்களிடம் வைத்திய பரிசோதனை செய்வதற்கு மாதக் கணக்கில் தவங்கிடக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் இத் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு மேலதிகச் செலவு ஏதும் ஏற்படாது என அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வங்கிகளும், சில கூட்டுத்தாபனங்களும் தமது ஊழியர்களது வைத்தியச் செலவினத்தை பொறுப்பேற்கும் நடைமுறை தற்போது பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

## விவசாய டிப்ளோமா பயிற்சி விண்ணப்பங்கள் கோரல்

குண்டசாலை, பொல்வெஹர, அங்குணுகொல பெவெஸ்ஸ ஆகிய இடங்களிலுள்ள இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 1991- 93-ம் ஆண்டு இரண்டு வருட டிப்ளோமா பயிற்சிக்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சையொன்று சிங்களத்திலும், தமிழிலும் அடுத்த வருடம் பெப்ரவரி 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி, குருநாகல், அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய நகரங்களில் இப்பரீட்சை நடாத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் க. பொ. த (சா) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மற்றும் கணிதம், விஞ்ஞானம், சமூகவிஞ்ஞானம், ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு தொழில் நுட்ப பாடமான விவசாயத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகள் 1991-ம் ஆண்டு மார்ச் 13-ம் திகதியன்று 17 வயதுக்கும் 25வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் இந்த மாதம் 28 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக பிரதி விவசாயப்பணிப்பாளர் (கல்வி பயிற்சி) த. பெ. இல. 20, விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 23. 11. 1990 வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (18)

வி. பு. ம. மு. கூட்டுறவுத்துறை

## பலநோ. கூ. சங்கங்கள் சீராக இயங்க வேண்டும்

''நிவாரணஉணவுப்பொருட்கள் மக்களுக்கு சீரான முறை ... நிலையங்களில் உள்ள பொருள் இருப்புகள் மக்களுக்

கனகரத்தினம் ம.வி.

## ஆசிரியர்கள், மாணவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் இரத்ததானம்

யாழ் கனகரத்தினம்மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரிய, ஆசிரியைகளுடன், உயர் வகுப்பு மாணவர்களுமாக முப்பதுக்கும் அதிகமானோர் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்துள்ளனர்.

இன்னும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இரத்த தானம் செய்வதற்காகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். (47)

கொம்படிப்பாதை

## மழை வெள்ளம் காரணமாக போக்குவரத்துப் பாதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியூடாக வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பிரதான தரைவழிப்பாதையான கட்டைக்காடு, சுண்டிக்குளம் பாதையும் கடல்வழிப்பாதையான போக்கறப்பு - கொம்படி வெட்டைப் பாதையும் கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாகப் பாதைகளில் நீர் தேங்கி வாகனங்கள் விரைவாகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொருட்கள் ஏற்றிவரும் உழவு இயந்திரங்கள் வெகு சிரமத்தின் மத்தியிலேயே இப்பாதைகளால் பிரயாணம் மேற்கொள்கின்றன. (18)

ஜெயலலிதா குற்றச்சாட்டு

## தமிழகக்கரையோரம் மாநில நிர்வாகத்தில் இல்லையாம்!

''தமிழகத்தில் வேதாரணியத்திலிருந்து ராமேஸ்வரம் வரையிலான கடலோரப்பகுதிகள் மாநில நிர்வாகத்தின் கீழான கட்டுப்பாட்டில் இல்லை'' என்று அ. தி மு க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழகத்தின் தற்போதைய நிலையை நன்கு கவனித்து தக்கநேரத்தில் உரிய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு அவர் பிரதமரை இவ்வறிக்கை மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிறுவர்களுக்கு பால்மா அன்பளிப்பு

கடந்த ஆனி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் குரும்பசிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் உள்ள இரண்டு வயதுக்குக் கீழ்பட்ட குழந்தைகளுக்கு சன்மார்க்க சபையினர் பால்மா வகைகளை இலவசமாக வழங்கினர். சபையின் டென்மார்க்

சத்திர சிகிச்சை

## நேற்று மாத்திரம் 69 பேர் அனுமதி

யாழ் போதனாவைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் நேற்று மட்டும் 69 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவசர சிகிச்சைப்பிரிவிற்கு

## சுன்னாகத்தில் மக்கள் அஞ்சலிக்கு போராளிகளின் புகழுடல்கள்

நேற்று முன்தினம் மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி நாளில் சட்டுவன் பகுதியில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த கட்டன் சஜித்தா, கப்டன் ஆஷா, ரதிகலா, றமா, சாம்சன், ஸ்டாலின், அலன் ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக சுன்னாகம் பகுதியில் இன்று காலை 6 மணிமுதல் காலை 10மணிவரைவைக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் ஆயுதங்களும். ஒரு இராணுவச்சிப்பாயின் உடலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (71, 33)

## ஜே. வி. பியின் கண்ணிவெடி தயாரிப்பாளர் கைது!

ஜே. வி. பி. இயக்கத்தின் தரைக் கண்ணிவெடிகளைத் தயாரிப்பவர் ஒருவரை பொலிஸார் இரவு நேரம் வீடொன்றில் வைத்துக் கைது செய்ததாக பொலிஸ் செய்திக்கள் தெரிவித்தன.

ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் இடம் பெற்ற பல ஆயுதப்படையினரின் கொலைகளுக்கும்இவருக்கும்தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (33)

டிசம்பர் மாதத்துக்குரிய

## ஆசிரியர் சம்பளக் கட்டு நிதி இங்கு வந்துள்ளது

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான டிசம்பர் மாதத்துக்குரிய சம்பளக் கட்டு நிதி கொழும்பிலிருந்து வந்துசேர்ந்துள்ளது.

பெரும்பாலும் இவ்வார இறுதிக்குள் இந்தச் சம்பளத்துக்குரிய காசோலைகள் வழங்கப்படலாமெனத் தெரிய வருகிறது (33)

## மருந்துகள் இல்லாமையால் கிளினிக் நடைபெறவில்லை

மருதன்கேணி இராமிய வைத்தியசாலையில் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை நடைபெறும் கர்ப்பவதித்தாய்மார் சிறு குழந்தைகளுக்கான கிளினிக் கடந்த வாரம்நடைபெறவில்லை.

போதியளவு மருந்துகள் இல்லாமையாலேயே இதுநடைபெறவில்லையென வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இனிமேல் மருந்துவகைகள், ஊசி மருந்துகள் வந்தால் மட்டுமே கிளினிக் நடைபெறுமெனவும் அவர் கூறினார். (18)

பாராளுமன்றத்தில் இணையமைச்சர்

## ஸ்திரமான ஆட்சி அமைக்க தமிழர், முஸ்லிம்கள் உதவி தேவை

''தமிழர்கள் பல கூறுகளாகப் பிரிந்து சென்றுள்ளனர். ஆனால் முஸ்லிம்கள் ஐ.தே. க. ஆதரவாளர்களாகவும், சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களாகவும் மட்டுமே பிரிந்திருந்தனர் ஆனால் இப்போது முஸ்லிம்களும் மூன்றாகப் பிரிந்துள்ளனர்.''

இவ்வாறு சமூகசேவைகள் ராஜாங்க அமைச்சர் கவிரத்தினா பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், எதிர்காலத்தில் இந்த நாட்டில் ஸ்திரமான ஆட்சி அமைப்பதற்கு சுதந்திரக் கட்சியும், ஐ. தே. கட்சியும் இனிமேல் சிறுபான்மையினருக்குப் பின்னால் திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (33)

யில் வழங்க பலநோ.கூ. சங்க கிளைகள் தமது முழு ஒத்துழைப்பையும்நல்க வேண்டும். மக்கள் அதிக நேரம் நீண்ட வரிசையில் காத்து நிற்பதை தவிர்க்க வேண்டும்.''

யாழ் மாவட்ட பல.நோ. கூ.சங்க கிளை நிலையங்களின் மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவுத்துறையைச்சேர்ந்த திரு. மயூரன் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்''கிளை

---

## மட்டக்களப்பில்...

செய்கை முற்றாகப் பாதிப்படைந்து பல விவசாயிகள் பெரும் கவலைப் படுவதாகவும் தெரியவருகிறது.

(ப-11)

---

## வள்ளத்தை..

கும் போது படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கலாம் என்றும் படகிலிருந்தவர்கள் கடலினுள் குதித்து தப்பியிருக்கலாமெனவும் நம்பப்படுகிறது. (48)

---

குத் தெரியப்படுத்தப்படுவதோடு சரியான நிறைகளுடன் சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பொருட்களும் தவறாது வழங்கப்படவேண்டும்.'' என்றார்.

''தற்போதைய போர்க் காலச் சூழ் நிலையைகருத்திற் கொண்டு சகல விற்பனை நிலையங்களும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திறந்திருந்து பொருட்கள் விநியோகம் செய்யப்படவேண்டும்'' எனவும் தெரிவித்தார். (66)

---

## அரசாங்க ..

டார்.

இக்கப்பல் வருகையை அடுத்தும் வவுனியாவில் நிலவும் போக்குவரத்தின் தடை காரணமாகவும் அவரது கொழும்பு விஜயம் தாமதமானது.

யாழ் செயலக கணக்குகள் சம்பந்தப்பட்ட சில முக்கிய ஆவணங்களை இம்மாத இறுதிக்குள் கொழும்பில் ஒப்படைத்து அதற்கான கட்டுநிதியைபெறப் வேண்டியிருப்பதால் அவர் கொழும்பு செல்கிறார். (66)

---

னர். சபையின் டென்மார்க் நாட்டுப் பிரதிநிதி இதற்கான நிதியினைச் சேகரித்து அனுப்பிவைத்தார்.

இதுவரை இவ்வுதவிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்துடன் சன்மார்க்க சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரையுடன் தொடர்பு கொண்டு பால்மா வகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## யுத்த...

யினர் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் குறித்து அறிக்கை ஒன்று விடுத்தமையும், ஆயர்களுடன் பேச்சுகள் நடாத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

---

## யாழ்...

ஏற்பட்டது. மேலும் மூவரும் காயமடைந்தனர்

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு அருகிலும், கட்டுடை, சண்டிலிப்பாய் பகுதிகளிலும் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன இங்குள்ள வயல் ஒன்றிலும் ஷெல் விழுந்தது.

(ப 11, 17, 47, 12)

---

ஏழுபேர் அனுமதிக்கப்பட்டனர். இவ் வைத்திய சாலை டாக்டர்களும், ஊழியர்களும் தமது கடமை நேரம் என்று பாராது சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

(ப-11)

---

## மாணவர்...

லில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளர் மேஜர் முரளியின் நினைவாக கடந்த 21-ம் திகதியிலிருந்து 23-ம் திகதி வரை மாணவர் எழுச்சி நாளாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் பிரகடனப்படுத்தியிருந்தது.

இறுதி நாளான நேற்று பெருந்தொகையான மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மேஜர் முரளியின் உருவப்படமும் சுலோகங்களும் கொண்டு செல்லப்பட்டன. இறுதியில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. (70)

---

# மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்க பேராதனையிலிருந்து விதைகள்

யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மரக்கறித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கமாக மரக்கறிச் செய்கையை ஊக்குவித்து மரக்கறித்தட்டுப்பாட்டைபோக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட விவசாய உதவ்ப்பணிப்பாளர் திரு கா.குணரத்தினம்பேராதனையில் இருந்து மரக்கறி விதைகளை தமது திணைக்கள உத்தியோகத்தர்களை அனுப்பி தருவித்துள்ளார்.

இந்தவிதைகளை தற்போது திருநெல்வேலியிலுள்ள விவசாய அலுவலகத்தில் பல விவசாயிகள் பெற்றுச் செல்வதைக் காணமுடிகிறது. (33)

# நிதிக்கம்பனி பணிப்பாளர்கள் வெளிநாடு செல்லத்தடை

கொழும்பில் உள்ள நிதிக் கம்பனிஒன்று வீழ்ச்சியடைந்ததையடுத்து ஐந்து நிதிக்கம் பனிப் பணிப்பாளர்களை நாட்டை விட்டுச்செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் படி இந்த ஐந்து பணிப்பாளர்களின் பாஸ் போர்ட்டுகளை மத்திய வங்கியின் ஆலோசனையின் படி குடிவரவு குடியகல்வு திணைக்களம் பறிமுதல் செய்துள்ளது.

இதேவேளை மத்திய வங்கியில் பதிவு செய்யாத சில நிதிக்கம்பனிகள் பிரச்சினைக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 24-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.